**இலங்கை மன்றம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் | இந்த மூலதன மானியம் புதிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் | உரிய நியமத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| 11 "மாற்றம் செய்ய முடியாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான வரவுகள்" நியமத்தின் பிரகாரம் (2019 யூன் 19 ஆம் திகதி கூடப்பட்ட பொதுத்துறை கணக்கீட்டு நியம குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட) திறைசேரியில் இருந்து கிடைத்த ரூபா 10,400,000 பெறுமதியான மூலதன மானியம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தால் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற சமையலறையை நவீன மயப்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 26,846,285 ஆன சலையலறை உபகரணங்கள் மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் தேவையான பிரகாரம் பொருட் பதிவேட்டு பொருட்கள் மற்றும் நடைமுறைச் செலவினங்களாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக பூர்த்தி செய்யப்படாத வேலையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | சமையலறையை நவீன மயப்படுத்தும் வேலை ஒப்பந்தகாரரால் இதுவரை பூர்த்திசெய்து உரிய பிரகாரம் கையளிக்கப்படாதிருந்ததுடன், நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான மொத்த பெறுமதி செலுத்தி பூர்த்தி செய்யப்படாமையினால் செலவிடப்பட்ட தொகை பூர்த்தி செய்யப்படாத வேலையாக காண்பிக்கப்பட்டுள்ளது. | உரிய பிரகாரம் பொருட் பதிவேட்டு பொருட்கள் மற்றும் வருமான செலவினங்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கை மன்றத்தால் பேணிச் செல்லப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | செயலமர்வுகளுக்காக பல்வேறு நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 8,796,974 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ii) | 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை வியாபார அபிவிருத்தி பிரிவினால் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 3,869,711 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் 15 ஆம் பிரிவு | 2017 முதல் 2021 வரை நடாத்தி முடிக்கப்பட்ட 30 பாடநெறிகளுக்கு இடையே 16 பாடநெறிகள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 47 பாடநெறிகள் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | புதுப்பித்தல் 02 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகின்றமையால் பதிவு செய்யும் பிரச்சினைகள் காணப்படுகின்றது. இந்த பாடநெறி தகவல்கள் TVEC தரவு முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி விநியோகிக்கப் பட்ட பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட | மன்றத்தால் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், (KPI) அவற்றை மதிப்பீடு செய்து அதில் நிறைவேற்றப்பட்ட | பதிலளிக்கப்படவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டிக் கோவையின் ஐந்தாவது அத்தியாயத்தின் இணைப்பு 01 | அளவு எவ்வளவு என (Outcome) பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 2001/03-137 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானம் | ஒவ்வொரு விரிவுரையாளரும் மாதாந்த செயலாற்றல் அறிக்கை பேணிச் செல்ல வேண்டிய போதிலும், 2022 சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியின் போது அவ்வாறு மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கை பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | மன்றத்தின் சகல ஊழியர்களுக்கும் பொது மதிப்பீட்டு திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படுகின்றது. | தற்போது நிரந்தர சேவையில் இருக்கின்ற சகல விரிவுரையாளர்களினதும் ஆகக்கூடிய சேவையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்த பயிற்சி நிறுவனத்திற்காக விநியோகிக்கப்படுகின்ற ஆலோசனை பத்திரம் | 2022 ஆம் ஆண்டில் மன்றத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற 66 பாடநெறிகளுக்காக பதிவுசெய்துள்ள மாணவர்களின் தகவல்கள் குறித்துரைத்த பிரகாரம் இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | புதுப்பித்தல் 02 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகின்றமையால் பதிவுசெய்தலில் பிரச்சினைகள் காணப்படுகின்றது. இந்த பாடநெறிகளின் தகவல்கள் TVEC தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பதிவுசெய்வற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்த பயிற்சி நிறுவனத்திற்காக விநியோகிக்கப்படுகின்ற ஆலோசனை பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 53,397,480 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 24,437,646 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 28,959,834 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் பாடநெறி கட்டண வருமானம் ரூபா 38,788,158 இனால் அதிகரித்தமை மற்றும் உணவு மற்றும் ஏனைய வசதிகள் வழங்குவதில் வருமானம் ரூபா 18,739,499 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை மன்றத்தால் உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா, சான்றிதழ் பத்திர பாடநெறிகள் மற்றும் 103 பல்வேறு செயலமர்வுகள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டு 10 நிரந்தர விரிவுரையாளர்களுக்காக விரிவுரைக் கட்டணமாக ரூபா 15,633,473 தொகை மற்றும் வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக ரூபா 17,078,356 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது பாடநெறிகள் மற்றும் 45 செயலமர்வுகளில் 29 இற்காக வெளிவாரி விரிவுரையாளர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 06 பாடநெறிகளின் போது வெளிவாரி விரிவுரையாளர்களின் வள பங்களிப்பு 75 சதவீதத்தை விஞ்சியிருந்தது. மன்றத்தின் பாடநெறிகளை இணைக்கும் அலகு காணப்படும் போது மன்றத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் இந்த பாடநெறிகளை இணைக்கும் நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபட்டிருந்தனர். | விரிவுரையாளர்கள் மன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அவர்களின் வருடாந்த இலக்கை கவனத்தில் கொண்டு தமது விடயப்பரப்பிற்கு புறம்பான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்கின்றனர். அதன் போது அந்த விடயம் தொடர்பான அறிவு இல்லாமையினால் தரமானதாக விரிவுரைகளை வழங்கும் இயலுமை அவர்களிடம் காணப்படவில்லை. அதனால் வெளிவாரி வளப் பங்களிப்பாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | தற்போது நிரந்தர பதவிகளில் ஈடுபடுகின்ற விரிவுரையாளர்களிடம் இருந்து ஆகக் கூடிய சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மூன்று பாடநெறிகளில் கிடைத்த உள்ளபடியான வருமானம் ரூபா 681,600 ஆக இருந்ததுடன், மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான கிரயம் ரூபா 3,037,000 ஆகும். அதன் பிரகாரம் விரிவுரைக் கட்டணம், | பதிலளிக்கப்படவில்லை. | கிரயம் மற்றும் நலன்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி பாடநெறிகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விரிவுரை மண்டப கிரயம் மற்றும் ஏனைய பொது மேந்தலைக்கிரயம் போன்ற நிலையான வடிவில் உள்ள கிரயங்கள் மாற்றமடையாமையினால் நிலையான கிரயத்தில் மாத்திரம் அல்லது பாடநெறி கட்டணம் மூலம் மேவுகை செய்ய முடியாதிருந்தமையால் மன்றத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2,355,400 ஆகும். | | |

**3.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 54,780,779 மீதி பேணிச் செல்லப்பட்டிருந்தது. இந்த பணம் குறுங்கால ஆக்கபூர்வமான மதலீடுகளில் ஈடுபடுத்தி நிறுவனத்திற்கு நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஒக்டோபர் மாதத்தின் போது ஆண்டின் இறுதியில் செலுத்துவதற்குள்ள பணம் குறுகிய கால முதலீட்டு வழிகளில் (அரச வங்கிகளில் நிலையான வைப்பு) ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | மிகை பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பிரிவின் பிரகாரம் 2022 சனவரி 10 ஆம் திகதி, இலக்கம் 128 பியோ (PEO TV) அலைவரிசை, கலையரங்கம், கட்டுப்பாட்டு மேடை, உற்பத்தி உபகரணங்கள் மற்றும் உரிய சேவைகள் 05 வருட காலத்திற்காக வாடகை அடிப்படையில் கையளிக்கும் கேள்வி பணிகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்ட | நடவடிக்கைகள் மிகவும் விரைவாக ஆரம்பிக்கும் தேவையின் அடிப்படையில் 2022 சனவரி 07 ஆம் திகதிய SLF/01/20/12 ஆம் இலக்க பதிற்கடமை பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் விநியோகிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. மேவுகைக்காக மாத்திரம் 2022.01.12 ஆம் திகதி முகாமைத்துவ பத்திர இலக்கம் 178 இன் கீழ் கேள்வி | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 2022 சனவரி 07 ஆம் திகதிய SLF/01/20/12 ஆம் இலக்க பதிற்கடமை பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் உரிய நிறுவனத்திற்கு 2022 சனவரி 10 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. | கையளிக்கப்பட்டதாக மேலும் மேவுகை அங்கீகாரத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ii) | இலக்கம் 128 என்ற பியோ ரீவீ (PEO TV) அலைவரிசை வாடகை அடிப்படையில் கையளித்தல் தொடர்பான கேள்வி கோரல் கோவையில் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையின் பொது நிபந்தனை இலக்கம் 3.1 இன் பிரகாரம் வாடகையாளரால் வாடகை உடன்படிக்கை கையளிக்கும் கட்டளை பெற்று ஏழு (07) நாட்களுக்குள் வங்கி பிணையொன்றின் மூலம் செயலாற்றல் பிணை முறி (Performance Bond) வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும், உரிய பிரகாரம் வாடகையாளரின் செயலாற்றல் பிணை முறியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய Nations Trust வங்கியின் மூலம் விநியோகிக்கப்பட்டட 052D8062110357 என்ற ரூபா 120,000.00 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி (Performance Bond) உரிய நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கேள்வி கோரும் கோவையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் உரிய பெறுமதியுடைய வங்கி பிணை முறியொன்றின் மூலம் செயலாற்றல் பினைமுறியொன்று பெறப்படல் வேண்டும். |
| (iii) | செப்டம்பர் முதல் திசெம்பர் வரை 04 மாதங்களுக்கான வாடகையாக ரூபா 4,050,685 தொகை மற்றும் உணவு மற்றும் விடுதி வசதி வழங்குவதற்காக ஏப்ரல் முதல் திசெம்பர் வரை 07 மாதங்களுக்காக தனியர் கம்பனி ஒன்றில் இருந்து ரூபா 300,189 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொது மக்கள் இணைப்பு உத்தியோகத்தர் என்ற இரு பதவிகள் 2021 செப்டம்பர் முதல் 2022 திசெம்பர் வரை 16 மாத காலம் வெற்றிடமாக காண்பபட்டது. உத்தியோகத்தர் இருவரும் தமது உள்ளபடியான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக இந்த இரண்டு பதவிகளுக்காக பதிற்கடமை உத்தியோகத்தர்களாக செயற்பட்டு அந்த காலத்திற்காக ரூபா 540,847 படி செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் 11 ஆவது அத்தியாயத்தின் 13.3 இன் படி பதிற்கடமை நியமிக்கப்படுவது உள்ளபடியான பதவி நியமிக்கப்படும் வரை தற்காலிக தீர்வாக மாத்திரமே ஆகும். முழுநேர உத்தியோகத்தர்களின் சேவை தேவையாயின் உள்ளபடியான நியமனம் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) வெற்றிடமான 10 முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமல் 2021 ஆம் ஆண்டின் போதும், 2022 ஆம் ஆண்டின் போதும் வெற்றிடமாக காணப்பட்ட அந்த 07 பதவிகளுக்காக தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 68,410 தொகையும், 2022 ஆம் ஆண்டில் 07 பேர்களுக்காக ரூபா 2,191,029 தொகையும் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் 11 ஆவது அத்தியாயத்தின் 13.3 இன் படி பதிற்கடமை நியமிக்கப்படுவது உள்ளபடியான பதவி நியமிக்கப்படும் வரை தற்காலிக தீர்வாக மாத்திரமே ஆகும். முழுநேர உத்தியோகத்தர்களின் சேவை தேவையாயின் உள்ளபடியான நியமனம் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |